"காத்தா நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கலாவழிப்பது வியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஆடு பங்குனிமீ 16-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 11-ம் இல


# கச்சதீவு யாருக்கு?

## கத்தோலிக்கரின் உதவியை அரசாங்கம் நாடுகின்றது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நெடுந்தீவுக்கு அப்பால் 10 மைல் தூரத்தில் உள்ள ஒருசதுரமைல் விஸ்தீரணமுள்ள தீவு ஒன்று இந்திய அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் பெரும் பிரச்சினையாக அண்மையில் வந்துவிட்டது. இது யாருக்குச் சொந்தம் என்ற கேள்வி எழுந்துவிட்டது. இந்தத் தீவில் வசிப்பவர் எவருமில்லை. ஆனால், பங்குனிமாதத்தில் அங்கே அர்ச். அந்தோனியார் திருநாளைக் கொண்டாடத் திரளான யாத்திரிகர்கள் யாழ்ப்பாணப்பகுதிகளிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வந்து சேர்கின்றனர். திருநாள் ஒருவாரமாக நடைபெறுகின்றது. அதன்பின் அங்கு இருப்பவர் எவருமில்லை. இத்தீவிலுள்ள புனித அந்தோனியார் சேத்திரத்தை யாழ்ப்பாண மேற்றிராசனமே சென்ற 45 வருடகாலமாகப் பரிபாலித்து வந்திருக்கின்றது. இந்தப் பொறுப்பு, இத்தீவு யாருக்கு உரியது என்று முடிவுசெய்வதில் பெருமிடம் பெறுமென நம்பப்படுகின்றது. இத்தகைய பொறுப்பு இந்தியாவுக்கு இருந்ததில்லை.

# கருதினல் கூறே அடிகளாருக்கு மேலும் ஒருபதவி

திருச்சபையின் சட்டங்களைப் பரிசீலனைசெய்து திருத்தி அமைக்கப் பாப்பரசரால் நியமிக்கப்பட்ட பரிசீலனைக் குழுவில் ஓர் அங்கத்தவராக நமது நாட்டுக் கருதினல் கூறேஅடிகளார் நியமிக்கப்பட்டிருக்கின்றார். வயோதிபத்தினலும், மரணத்தினலும் இக்குழுவின் தொகை குன்றிப் போனதால் 60 பேர் கொண்ட இக்குழுவுக்கு 10 புதிய கருதினல்மார் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இக்குழுவினருக்கு ஆலோசகர் சபை ஒன்றும் உதவிபுரிகின்றது. ஆலோசகர்கள் அலசி ஆராய்ந்து முடிவுசெய்யும் கருமங்களை இக்குழுவினர் மேலும் பரிசீலனைசெய்து பாப்பரசரின் முடிவுக்கு அனுப்பி வைப்பர். இந்த ஆலோசகர் குழுவில் கொழும்பு மேற்றிராசனக் குருமாரில் ஒருவராகிய வண. மணிக் முத்துக்குமாரு சுவாமியார் கடமையாற்றுகின்றார்.

## தெரேசாதாயார் லண்டன்நகரின் உதவி கேட்கிறார்

இந்தியாவிலும், பிறஇடங்களிலும் தமது கன்னியாஸ்திரிமடக் கிளைகளைநிறுவி வறுமை, பிணிமுதலியவற்றால் வாடிவதங்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஆறுதலாக விளங்கும் தெரேசாதாயார் சென்றவாரம் லண்டன்மாநகரம் சென்றிருந்தார். அங்கே தமதுவேலைக்கு உதவியளிக்குமாறு மக்களை விண்ணப்பித்துக் கொண்டார். தமது கன்னியாஸ்திரிகள் செய்துவரும் தொண்டைவிளக்கி உபந்நியாசம் செய்தார். "தமது கன்னியாஸ்திரிகள் செய்துவரும் தொண்டுஅல்ல அது; தேவன் அவர்கள்மூலம் செய்துவரும் தொண்டு" என்றார். அவர்பேச்சில் அன்பு ததும்பியது. மக்களை இவ்வளவாக நேசிக்கும் ஒருபெண் வேறொருவர் உண்டோஎன்று கேட்போர் மனதை உருக்குகிறது. "நாம் தேவனை இருவகையில் கண்ணால் காண்கின்றோம். ஒன்று திருப்பலியில் அப்பத்தின் வடிவிலும், இரசத்தின் வடிவிலும் காண்கிறோம். மற்றது முறிந்து தறிந்து, வாடிவதங்கிக்கிடக்கும்மானிடஉடல்களில் காண்கின்றோம்" என்றார்.

# நமது தனியார் பாடசாலைகளின் நிலை

## திரு. குலுகலவின் பிரலாபம்

இலங்கையில் தற்போதுள்ள தலைசிறந்த அறிஞர்களில் திரு குலுகலையும் ஒருவர். அவர் அநேக காலமாக "சிலோன் டெயிலி நியூஸ்' பத்திரிகையின் ஆசிரியராகக்கடமையாற்றியவர். அதன்பின் அரசாங்கத் தூதுவராக உரோமாபுரியில் வசித்தவர். பல நாடுகளின் பழக்கவழக்கங்களை அறிந்தவர். எமது நாட்டிலுள்ள தனியார் பாடசாலைகளை அரசாங்கம் நடத்திவரும் முறையைக் கண்டு அவர் பெரும் கவலை கொண்டுள்ளார். ஒரு தேசத்தின் கல்வியை உயர்நிலையில் வைத்திருக்கத் தனியார் பாடசாலைகள் அவசியம் என்பது அவரது துணிபு. அப்படியாயின், தனியார் பாடசாலைகள் சீர்குலைந்து, படிப்படியாக அழிந்துபோவதை அரசாங்கம் நன்கறிந்தும், மனத்திடமின்றிக் கைகட்டி வாய்பொத்தியாதொன்றும் புரியாது இருப்பதைக் கண்டு திரு. குலுகல மனம்வருந்துகின்றார். அரசாங்கத்தின் இம் மனப்பான்மை நாட்டுக்குத் துரோகம் என்று அவர் எடுத்துக்காட்டுகின்றார்.

## கருதினல் ஹீனன் ஆங்கில அரசாங்கத்தால் கௌரவிக்கப்பட்டார்

ஆங்கில நாட்டுக் கருதினல் ஹீனன் அவர்களுக்கு ஆங்கில நாட்டு அரசாங்கம் ஒரு விசேஷ சட்டாதிகாரி எனும் பட்டம் அளித்து, அவரையும் அதனல் ஆங்கிலநாட்டுக் கத்தோலிக்கரையும் கௌரவித் திருக்கின்றது. இப்பட்டம் அளிக்கப்பட்டிருப்பவர்கள் மிகச்சிலரே. வின்சர் கோமகன், முன்னாள் பிரதம மந்திரி மக்மிலன், ஐக்கிய அமெரிக்க நாட்டு ஸ்தானிகர், இன்னும் மிகச்சிலரே இப்பட்டத்துக்குரியராவர்.

## அமெரிக்க கத்தோலிக்க ஆஸ்பத்திரிகள்

ஐக்கியஅமெரிக்க தேசத்தின் ஒவ்வொருநகரிலும் காணப்படும் ஒருவிசேடம் யாதெனில் கத்தோலிக்கஆஸ்பத்திரிகள் இருந்துவருவதே. சனசமூகத்திற்குச் சேவைசெய்யுமுகமாக ஒவ்வொருநகரிலும் பலஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. இவைகள் அரசாங்க உதவியைப் பெறுவனவல்ல. ஆனால், அக்காலத்திலே பிரித்தானிய ஆஸ்பத்திரிகள் உதவிபெற்றமாதிரியாகச் சனசமூகத்தால் பரிபாலிக்கப் படுகின்றன. அங்குகன்னியாஸ்திரிமார் மகத்தான வைத்தியதொண்டாற்றி வருவதைக் கண்ணுற்றுப் பல்லோரும்அவர்களைப் பாராட்டி வருவது சர்வ சாதாரணமாகும்.

## போலிஷ் அரசாங்கமும் திருச்சபையும்

போலாந்திலே கத்தோலிக்க திருச்சபைக்கும், கம்யூனிஸ்த அரசாங்கத்துக்குமிடையே இருந்துவந்த குரோதத்தின்வேகாம் கடந்தஇருவருடங்களிலும் வெகுவாகத் தணிந்திருக்கிறதென்று பிறநாடுகளில் சஞ்சரிக்கின்ற போலிஷ் மக்களுக்குக் கருதினல் வைசின்ஸ்கிஆண்டகைபின் பிரதிநிதியாக இருந்துவருகின்ற றாபின்மேற்றிராணியார் றோமைநகரிலே பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் தெரிவித்திருக்கின்றார். இவர் சமீபத்திலே இருவாரகாலம் போலாந்தைத்தரிசித்துத் தமதுசுற்றத்தவர்களைச் சந்தித்துக்கொண்டு றோமைநகர் சென்றிருந்தார்.

# சில கொமியூனிஸ்த நாடுகளில் சிறிது மனமாற்றமா?

இவ்வருடம் சித்திரை, வைகாசி மாதங்களில் ஸ்பானியதேச சந்தியாகோ பிரதேசத்திலுள்ள ஒரு புனித யாத்திரை ஸ்தலத்துக்குச் சில கொமியூனிஸ்த நாடுகளிலிருந்து கத்தோலிக்க யாத்திரிகர்கள் செல்ல இருக்கிறார்கள். யூகோசிலவாக்கியா, சிலவாக்கியா நாடுகளிலிருந்தே இந்த யாத்திரிகர்கள் வருகின்றனர். இந்த யாத்திரையை யூகோசிலாவிய தேசசாகிறொப் நகர அதிமேற்றிராணியாரே ஒழுங்கு செய்திருக்கின்றார். இவ்வாறு முந்திய நாட்களில் கொமியூனிஸ்த நாடுகளிலிருந்து பிறநாடுகளுக்கு யாத்திரிகர்கள் சென்றது இல்லை. தம்நாட்டிலே தன்னும் வேதவழிபாட்டுக்குத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தனர். மேலும் நிலைமை சீரடைந்துவருவதை ஆவலுடன் கத்தோலிக்கர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# கன்னியாஸ்திரிகளுக்கும் 'கியூறியா'வில் உயர்பதவிகள்

இதுகாலவரையும் கன்னியாஸ்திரிமார் வத்திக்கான் பரிபாலனத்தில் பலவகைகளில் தொண்டாற்றி வந்திருக்கின்றனரெனினும் அவை எவையும் உயர்பதவிகளல்ல. வத்திக்கான்சங்க முடிவுகளுக்கு இணங்க அனுபவம் மிக்கவர்களை இல்லறத்தவரெனினும், கன்னியர்களெனினும், எவரெனினும் தக்கபயனளிக்கும் பதவிகளில் அமர்த்தப் பரிசுத்த தந்தை சித்தங்கொண்டுள்ளார். அண்மையில் சில இல்லற பெண்மணிகளும் சில உயர்பதவிகளில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். அதுபோலவே சில விசேஷ தொண்டுகள் ஆற்றிவரும் 6 கன்னியாஸ்திரிகளும் ஆலோசகர்சீதியில் உயர்பதவிகள் கியூறியாவில் பெற்றிருக்கின்றனர். இவர்கள் அறுவரும் மடாதிபதிகள். அண்மையில் நியமிக்கப்பட்ட 60 ஆலோசகர்களில் இவர்களுமடங்குவர்.

## அரசாங்க-மதஒத்துழைப்பு அவசியம்

சென்றமாதம் மேற்குஜேர்மனித் தலைவர் திரு. கீசிங்கர் அவர்கள் வத்திக்கானுக்குச் சென்று பரிசுத்த தந்தை ஆறுவது சின்னப்ப பாப்பரசரைத் தரிசித்து நடாத்திய சம்பா

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

பங்குனி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 17 | ஞா. | தவக்கால 3-ம் ஞாயிறு | [ஊ] |
| 18 | தி. | கிழமைப்பூசை | [ஊ] |
| 19 | செ. | அர்ச். சூசையப்பர் | [வெ] |
| 20 | பு. | கிழமைப் பூசை | [ஊ] |
| 21 | வி. | ,, | [ஊ] |
| 22 | வெ. | ,, | [ஊ] |
| 23 | ச. | ,, | [ஊ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1968-ம்ஸு பங்குனிமீ 16-ங்வ


## தவத்தின் அவசியம்

இன்று எத்தனையோ கிறிஸ்தவர்களுக்கு தவம், துறவு என்னும் வார்த்தைகள் அர்த்தமற்றவையாய்ப் போய்விட்டன. இன்றைய உலகம் இன்பங்களில் மூழ்கிக்கிடக்கின்றது. தவமும் உடலை ஒறுப்பதும் பத்தாம்பசலிக் கொள்கைகளாகத் தோன்றுகின்றன.

வெளி உலகந்தான் இவ்வாறு கருதுகின்றதென்றால், கத்தோலிக்கரின் வாழ்விலும் அது பிரதிபலிக்கிறது. சில வருடங்களுக்கு முன் உலகம் பாவத்திற்கேதுவானது, மனிதனின் விரோதி என்று தாமரையிலைத் தண்ணீர் போல் ஒட்டாது வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இன்று உலகப்பொருள்களுக்கும் மனித உடலுக்கும் ஒரு மதிப்புண்டு, உலக இன்பங்கள் பாவமில்லாதிருக்கும் வரையில் அவற்றை ஏன் விட்டுவிட வேண்டும் என்று சிந்திக்கின்றனர். அல்லது எமக்கு வரும் தவிர்க்கமுடியாத துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டால் அது போதிய தவமாகாதா, வலியப்போய் துன்பங்களை ஏற்பானேன் என்று கேட்கின்றனர். மனித சுபாவமே நன்மையானது என ஏற்றுக் கொள்ளப்படும்போது அதை மேற்கொள்ளத் தவக்கிருத்தியங்கள் செய்வானேன்?

உண்மையில் தவம் என்பது தீமையான ஒன்றை விலக்குவதல்ல. இன்னும் மேலான நன்மையைக் கருதி நன்மையான ஒன்றை விட்டுவிடுவதாகும். ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்விலிருந்து தவம் பிரிக்கமுடியாதது. ஏனெனில் கிறிஸ்துநாதரே அதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார். "என்னைப் பின்பற்ற விரும்புபவன் தன்னை மறுதலித்து, என் சிலுவையைச் சுமந்துகொண்டு என் பின்னே வரக்கடவான்." தவத்தின் மூலம் ஒருவன் கிறிஸ்துவைப்போல் சிந்திக்கவும், உணரவும், செயலாற்றவும் முற்படுகிறான். அவருடைய பாடுகளில் தானும் பங்குபற்றி அவரோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளுகிறான். தவமில்லா வாழ்வு பூரணமற்ற கிறிஸ்தவ வாழ்வாகும்.

சாதாரண மனிதனின் வாழ்வில்கூட தவத்தினால் பல பயனகளுண்டு. அது தீமையை வேரோடு அறுக்கிறது. மனிதனின் அளவுமீறிய ஆசைகளைக் கட்டுப்படுத்தி மன உறுதியைக் கொடுக்கின்றது, கீழ்த்தரமான நாட்டங்களை அடக்கியாள ஆன்மாவுக்குத் துணைபுரிகிறது. தவமின்றி மனிதன் தன் தீவிர உணர்ச்சிகளை அடக்கியாளவும் உலக பொருள்களையே நன்மைக் கேதுவாகப் பயன்படுத்தவும் முடியாது.

சிறு பிள்ளைகளுக்குத் தன்னும் தவக்கிருத்தியங்கள் செய்யும் பழக்கம் பயிற்றப்பட்டு அதன் அர்த்தமும் உணர்த்தப்பட வேண்டும். விசுவாசிகள் தேவன் முன்னிலையில் தாம் செய்யவேண்டிய தவத்தின் தன்மையை உணர்ந்து அதை அனுசரிக்க வேண்டும். இன்று திருச்சபைக் கற்பனைகளால் கட்டுப்படுத்தப் படாதபடியால் தமக்கு இதில் எவ்வளவு கடமையுண்டு என்பதை அவர்களே தீர்மானிக்கலாம். தேவன் தமக்கு அனுப்பும் துன்பதுரிதங்களைப் பொறுமையோடு சகிப்பதுடன், தாமே மனமுவந்து சில தவக்கிருத்தியங்களை மேற்கொள்வது அவசியம். இவை பிறசிநேகத்துக்குத் துணைபுரிவனவாயிருப்பின் இன்னும் சிறந்தனவாம்.

# புனித தகப்பன் அர்ச். சூசையப்பர்

உமது தகப்பனும் நானும் ... இவ்வழகான மகத்தான உரிமையைத் தேவனின் தாயும் பரலோக பூலோகத்தின் இராக்கினியுமே கூறியிருக்கிறார். அவரே இவ்வுண்மைக்குச் சாட்சி. யேசு தேவனின் குமாரன் என்ற உண்மையை இன்னும் ஏற்றுக்கொள்ளும் பாக்கியம் கிடையாதவர்கள அவரைத் "தச்சனின் மகன்" என்றுதான் சொல்லட்டும். புனித சூசையப்பர் என்ன பாக்கியத்திற்கு அழைக்கப்பட்டாரென்று கடவுளுக்குத்தெரியும்; யேசுவுக்குத்தெரியும்; தேவதாய்க்குத்தெரியும்; கிறிஸ்தவர்களுக்குத் தெரியும்; அல்லாதவர்களுக்கும் கொஞ்சம் தெரியும்.



### அவர்களுக்குக் கீழ்ப்படிந்துவந்தார்

யேசுவின் முப்பத்துமூன்று வருட சீவியத்தில் முப்பதை எப்படிக்கழித்தார். சுவிசேஷகர் கூறுவதுபோல் "அவர் அவர்களுக்குக் கீழ்ப்படிந்துவந்தார்." தேவாதிதேவன், சகல புண்ணியங்களின் ஊற்றாகிய பரிசுத்தர், பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றவந்தவர், யாரின் கட்டளைக்குப் பூரணமனதுடன் அமைந்திருப்பார்? எவருக்கு அமைவதால் ஞானத்தில் வளர்ந்திருப்பார்? அவர்கள் மெய்யாகவே பரிசுத்தத்திலும் சகல புண்ணியங்களிலும் நிறைந்தவர்களாகவே இருந்தார்கள். யேசுவுக்குப் பிதாவும் மாதாவுமாயிருக்க அவர்களைத் தேவனே தெரிந்துகொண்டார். அவர்களின் ஒத்துழைப்பும் பூரணமாய் இருந்தது. எனவே, இதை மாத்திரம் திருக்குடும்பம் என அழைக்கிறோம்.

### திருக்குடும்பம்

புனித சூசையப்பர் தேவனின் கைத்தாதை, பரலோக பூலோக இராக்கினியின் மிகவும் அரியபத்தா, தொழிலாளருக்கு ஓர் அழகிய மாதிரிகை. சகல கிறிஸ்தவர்களுக்கும் ஓர் உன்னத எடுத்துக்காட்டு. எனவே ஒருமுழுமாதத்தைத்திருச்சபைஇவருடைய நாமத்திற்கு விசேஷமாக அர்ப்பணித்திருக்கிறது. அவருக்கு விசேஷ வணக்கம் செலுத்தச் சகலரையும் ஊக்குவிக்கிறது. இவ்வுலகில் ஒருகுடும்பத்திற்குச் சேராத ஒருவருமேயில்லை. பிதா மாதா பிள்ளை இம்மூன்றும் பரமதிரித்துவத்தின் அழியாத சாயல்கள். இம்மூன்று எண்ணங்களையும் யாருமே பிரிக்கமுடியாது. பிள்ளை என்று கூறக் கூடிய எவரும பிதா மாதா என்ற எண்ணங்களைச் சேர்த்தே கூறவேண்டும். ஆனால் திருக்குடும்பமோ எல்லாக் குடும்பங்களும் என்றும் அடையும் மகிமைக்கும பாக்கியத்திற்கும் மூலகாரணமாயிருக்கிறது. ஏனெனில், அது தேவனின் குமாரனைப் பிள்ளையாய் அடக்கியுள்ளது.

### திருக்குடும்பத்தின் பிள்ளை தேவன்

யேசு மரியாய் சூசையாகியமூவரும் கொண்டதே திருக்குடும்பம். இதில தேவன் பிள்ளை; நித்தியமற்ற மனி

(பி. ஜே. அமிர்தநாயகம்)

தனை நித்திய சீவியத்திற்குத் தேவன் எப்படி முத்திரித்தார்? அவர்கள் மத்தியில் அவதாரமானார். அவர்களோடு இரண்டறக் கலந்தார். அவரின் சீவிய போசனத்தால் அவர்களைத் தனது மயமாக்கினார். மனித மக்களைத் தேவ மக்களாக்கினார். எப்படி உருவமில்லாத ஒரு கலலுக்குச் சிற்பி ஒருவன் உருவத்தைக் கொடுத்து அழகாக்கிறானோ அதுபோலவே நித்தியமும் பாக்கியமும் இல்லாத மனிதருக்குத் தேவ சிற்பி தேவ உருவத்தை நித்தியத்திற்கும் கொடுத்தார். இதற்கே தேவன் மனித அவதாரம் எடுத்தார். திருக்குடும்பமும் உருவாக்கப்பட்டது.

### பிள்ளையின் பெற்றோரின் அழைப்பு

எப்படி ஒரு குடும்பத்தைப் பிரிக்க முடியாதோ அதேபோல தேவனால் மிகவும் அன்னியோன்னியமாய் இணைக்கப்பட்ட யேசுவின் பெற்றோரைப் பிரிக்கமுடியாது. அவர்களை இணைத்தவர் யேசு; அவர்களை ஐக்கியப்படுத்துகிறவர் யேசு; அவர் அன்பின் பூரணம்; அவர்கள் மத்தியில் அன்பின் ஆட்சி பூரணமாய் என்றுமிருந்தது; திருக்கும்பதின் உயிர் அவரே; அவர் அழியாத உயிர்; மரியாளின் மாமிசமும் சம்மதமும் தேவன் ஏற்றுக்கொண்டார்; சூசையப்பரின் பூரணசம்மதத்தையும் ஒத்துழைப்பையும் தேவன் ஏற்றுக்கொண்டார்; இதன் பலனே திருக்குடும்பம்; வார்த்தையானவர் மாமிசமானார்; அவரை இருவருமே போஷித்துவந்தனர்; காத்துவந்தனர்; வளர்த்து வந்தனர். வயதிலும் ஞானத்திலும் வளர ஒத்துழைத்தனர்; இதுவே அவர்களின் அழைத்தல்.

### யேசுவின் ஞான உடல்

"நானே திராட்சைக் கொடி, நீங்களோ அதன் கிளைகள்" என்றார் யேசு. புனித மரியாளும் சூசையும் திராட்சைக் கொடியை ஏன் வளர்த்தார்கள்? உண்மையான பலன் பெறத்தானே. அவர்கள் உருவாக்கிப் பாதுகாத்து வளர்த்த கொடி பூரணமாய்க் கிளைகள் விட்டுப் பயன்தருவதே அவர்களின் தணியாத நோக்கம். எனவே, யேசுவின் ஞான உடலான திருச்சபையே யேசுவின் திராட்சைத்தோட்டம். இதற்காக மிகவும் பிரமாணிக்கமாய் என்றும் உழைப்பவர்களே புனித மரியாளும் சூசையும். எனவே, புனித மரியாளின் பக்தர்களைப்பற்றிப் புனித பேர்ணாட் கூறுவதுபோல் புனித சூசையப்பரின் பக்தர்களைப்பற்றியும் நாம் துணிவோடு கூறலாம். "சூசையப்பரின் பிள்ளை ஒருபோதும் அழிந்து போகாது."

### சூசையின் பக்தர்கள் யார்?

அன்பே கடவுள்; அன்பே மாமிசமான யேசு; அன்பால சீவிப்பவர்களே அவரின் பக்தர்கள். அதேபோல் சூசையப்பரின் பக்தர்கள் யேசுவின் அன்பால் சீவிப்பவர்கள். அவர்கள் உலகத்திற்கு யேசுவின் ஒளியாயும் உப்பாயுமிருப்பார்கள். உலகம் மக்களைத் தன்பக்கமாய் இழுக்க யேசுவின் பக்தர்கள் சகல மக்களையும் யேசுவின் பக்கமாய்ச் செல்லச் செய்கிறார்கள். யேசுவை அவர்களின் உள்ளங்களில் சீவிக்கச் செய்கிறார்கள். எல்லோரையும் யேசுவின் அன்பின் ஆட்சிக்குள் செலுத்தி யேசுமயமாக்குகிறார்கள். எப்படிச் சூசையும் மரியாளும யேசுவை வளர்த்து அவரின் ஞான உடலாகிய பரிசுத்த திருச்சபையை ஆரம்பித்தார்களோ அப்படியே அவர்களின் பக்தர்கள் யேசுவின் ஞான உடலை வளரச் செய்கிறார்கள்.

## அருளப்ப பாப்பானவரும் யூத அகதிகளும்

இரண்டாவது உலகமகாயுத்தத்தின்போது துருக்கியில் அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியாயிருந்த அருளப்பபாப்பானவர் நாஸிகள் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து தப்பியோடிய 20,000 யூத அகதிகள் நடுநிலைமை நாடாகிய துருக்கியிலே அடைக்கலம் புக ஆருதவிசெய்தாரென முன்னாள் வத்திக்கான் காரியதரிசியான 63வயதுடைய வண. லூய்ஜி பிறெசியானி சுவாமிகள் தெரிவித்திருக்கின்றார். இவர் பதினான்கு வருடகாலம் அப்போது றொங்கலியென அறியப்பட்டு வந்த அவருடைய காரியதரிசியாயும், பொது நிர்வாகஸ்தராயும் விளங்கியிருந்தார்.

1944-ம் ஆண்டு நாஸிகளிடமிருந்து தப்பியோடிப் பல்கேரிய நாட்டையடைந்த 20,000 யூதர்களுக்கும் உதவிசெய்ய முனைந்து, அருளப்ப பாப்பானவர் அந்நாட்டின் போறிஸ் மன்னருக்குத் தமதுகரத்தால் எழுதியனுப்பிய கடிதத்திலே, இந்தயூதர்களைத் தன்னிடம் திரும்பக் கையளிக்குமாறு கேட்டிருக்கும் ஹிட்லரின் தண்டுமிண்டான கேள்விக்கு விட்டுக்கொடுக்க வேண்டாமென்று அவரை இரந்துகொண்டார். அதன் பேரில் போறிஸ்மன்னர் அவர்களைத் திரும்பக் கையளிக்கவில்லை. அதற்குப்பதில் அவர்களெல்லாம் துருக்கிக்குச் செல்லுமாறு அனுமதிக்கடிதங்கள்பெறவழிபண்ணினார். "துருக்கிய அரசாங்கத்துக்குப் பிரயாண அனுமதிச்சீட்டுகளைத் தயாரிக்க—அதாவது அவைகளை ரைப்அடித்துக் கொடுக்க றொங்கலி ஆண்டவருக்கு நானே உதவிசெய்தேன்" என்று சுவாமியார் கூறுகின்றார்.


சீனாவின் அண்மையிலுள்ள ஹொங்கொங்தீவிலே 7,50,000 மக்கள் சேரிகள், வள்ளங்கள் அல்லது வீதிகளின் பக்கமாகவுள்ள நடைபாலைதகளில் வசிக்கிறார்கள் என்பது தெரியுமா?

மேற்கிந்திய தீவுகளைச்சேர்ந்த ஹெயிற்றிநாட்டிலுள்ள வளர்ந்தவர்களில் 90சதவிகிதமானோர் படியாதவர்கள் என்பது தெரியுமா?

முதலாவது உலகயுத்தம் ஆரம்பமாகுமுன் அதாவது 1914வரை மேலங்கிகளில் அமைந்த சிறுபைகளிலும், பொக்கெற்களிலுமே மணி பார்க்கும் கடிகாரங்கள் வைக்கப்பட்டு வந்தன என்பது தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ! உன் மகன் உன் தாய்



கல்வாரிமலையிலே சூதும் சூழ்ச்சியும்தலைதூக்கின. அக்கிரமமும் அநீதியும் தலைவிரித்தாடின. உத்தமனை எத்தர்கள் ஏமாளியாக்கினர். இறைவனுக்கு அவமானத்தைக் கொண்டுவந்த காட்சியைத்தான் மக்கள் கண்டனர். இருந்தும் கல்வாரிமலை என்னும் போர்க்களத்திலே, மக்கள் இறைவனின் வரம்பற்ற அன்பின் வலிமையையும், சக்தியையும் உணர்ந்தனர். உலகசரித்திரத்திலே நடந்த யுத்தங்களிலே தாயும்மகனும்போர்க்களம் புகுந்து மாற்றானுக்கு எதிராச் சண்டை பிடித்ததுண்டா? தமிழ்நாட்டிலே வீரத்தமிழ்த் தாய்மார் தங்கள் பிள்ளைகளைக் குளிப்பாட்டி, உச்சிமோந்து, அரவணைத்து முத்தம் கொடுத்துப் போர்க்களத்துக்கு அனுப்பியதாகத் தமிழ் இலக்கிய வரலாறுகள் கூறுகின்றன. ஆனால், தாயும் மகனோடு போர்க்களம் புகுந்ததாக இதிகாசம் கூறவில்லை. ஆனால், உலகசரித்திரத்திலே ஒரேயொரு தாய்தான் தனது சேயோடு போர்க்களம் புகுந்தாள். மனுக்குலத்தைப் பாவத்தின் கொடு பிடியிலிருந்து மீட்க இதோ! அன்னைமரியும் அமலன் யேசுவும் கல்வாரிமலை என்னும் போர்க்களத்தில் காணப்படுகின்றனர்.

இதோ! போர்! போர்! அறப்போர்! ஒளிக்கும் இருளுக்கும் இடையே சண்டை; அன்புக்கும் விரோதத்துக்கும் இடையே குமுறல்; புண்ணியத்துக்கும் பாவத்துக்குமிடையே யுத்தம். பழைய உடன்படிக்கையின் தாவீது இறைவனின் நாமத்தோடு போய் மூன்றுசிறு கற்களால் கோலியாத் என்னும் மாவீரனைத் தரையிலே வீழ்த்தினன். புதிய உடன்படிக்கையின் புதுத் தாவீதாகிய யேசுபிரான் இறைவனின் எல்லையற்ற அன்பின் ஆயுதத்தோடு பாவத்தின் கூர்மையையும், சாத்தானின் அரசையும் கவிழ்க்கப்போகிறார். இந்த அறப்போரிலே உலகஇரட்சகராகிய கிறிஸ்துவோடு சேர்ந்து மரியன்னையும் பங்குபற்றுகிறாள். எனவே, அவள் துணை இரட்சகி. துன்பச் சோகத்தினால் அவள் தரையிலே விழவில்லை. அவள் ஒரு வீரத்தாய்த் துணிவோடு தனது குமாரனின் சிலுவையின் அடியில் நிற்கிறாள். தனது குமாரனின் குருதி, அவள் அளித்த இரத்தம் மண்ணின் மீது துளித்துளியாக விழுவதைக் காண்கிறாள். ஒரு துடிப்பு, ஒரு வலிப்பு அவளின் தூயஉடலிலே. மனுக்குலத்தின் இரட்சணியத்துக்காகத் தன் மகனைப் பலியாகப் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறாள், சிமையோனால் கூறப்பட்ட வாக்கு இப்பொழுது நிறைவேறுகிறது. "உன் ஆத்துமத்தை ஒருபட்டயம் ஊடுருவிப்பாயும்."

இதோ! இரு தூய உள்ளங்களைப் பாருங்கள் — தனயன் சிலுவையிலே தொங்குகிறார் — அவரின் அன்னை சிலுவை அடியில் நிற்கிறாள். இவர்களின் உள்ளங்கள் இரண்டும் பரிசுத்தமானது — தூயது. தூயது ஏனெனில், தன்னலமற்றது; பரிசுத்தமானது ஏனெனில் உணர்ச்சிகளால் அங்கும் இங்கும் அலையாதது. ஒருவர் தேவகுமாரன்; மற்றவர் களங்கமற்ற, மாசற்றதேவ அன்னை. சிலுவையிலே தொங்கும் தனயன் தன் அன்னையை அரவணைக்க விரும்புகிறார்— ஐயோ! ஆணிகள் அவரின் கரங்களையும் கால்களையும் அழுத்திப்பிடிக்கின்றன. தனது மகனின் காய்ந்த தொண்டையைத் தண்ணீரால் நனைக்க விரும்புகிறாள் — மரியன்னை; ஆனால் இருவருக்கும் இடையே இருக்கும் தூரம் நீண்டதாய் இருக்கிறது.

ஓ! கிறிஸ்தவர்களே! அன்பினால் எமக்குத் தமது உடலையும், உயிரையும் அளித்தார் யேசு. இன்னும் அவர் மிகவும் நேசித்த ஒரு பொக்கிஷம் இருந்தது. அதுதான் அவரின் அன்பு நிறைந்த தாய் — எங்கள் ஒவ்வொருவருக்காகவும் சிலுவைஅடியில் நிற்கும் புனித அருளப்பரிடம் அவளை ஒப்படைக்கப்போகிறார். தமது தாயைப்பார்த்து அவர் சொல்லுகிறார்: அம்மா இதோ! உன் மகன்; பின் சீடனைப் பார்த்துச் சொல்லுகிறார்; இதோ! உன்தாய்.

பெத்லகேம் சிற்றூரிலே, கடும் குளிரிலே கிறிஸ்துவைப் பெற்றெடுத்தாள் மரியாய். இப்பொழுது கல்வாரிமலையிலே கிறிஸ்தவர்களைப் பெற்றெடுக்கிறாள் தேவ அன்னை. கிறிஸ்து அவளின் சொந்த மகன்; நாம் அவளின் ஞானப்பிள்ளைகள்.

நாம் ஒவ்வொருவரும் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டுப் பாவசங்கீர்த்தனம் செய்யச் செல்லும்பொழுதும், நற்கருணைபெறச் செல்லும் பொழுதும் கல்வாரிமலையிலே ஒலித்த அதே குரல் இங்கேயும் ஒலிக்கிறது "அம்மா! இதோ உன் மகன்."

வண. பிதா வே. அன்ரனி ஜோண்

# உத்தானத்தின் ஆயத்தம்

அருட்திரு துரைசிங்கம், அ. ம. தி.

தபசுகாலத்தில்சிறப்பாகக்கிறிஸ்துநாதரின் மரணத்தையும் அவரது உத்தானத்தையும் எதிர்பார்க்கின்றோம். ஆனால், இம்மரணித்தலும் உயிர்ப்பும் எமது அன்றாட வாழ்விலும் பிரதிபலிக்கவேண்டும். ஆகவே, திருச்சபையானது இக்காலத்தில் நாமெல்லோரும் மனந்திரும்பி விசுவாசப் பெருக்கடைந்து பாவமன்னிப்படைய வேண்டுகின்றது.

வத்திக்கான் பேரவை வழிபாட்டுக் கொள்கைத் திரட்டில் குறிப்பிடுவது போல் தபசுகாலம் திருமுழுக்கு எனும் அருட்தரு குறியின் மனப்பாங்கைக் குறிக்கிறது அல்லது அதற்காக ஆயத்தப்படுத்துகிறது. தபமானதுஉள்ளரங்கமாய்மட்டும் நின்றுவிடாது வெளியரங்கமாயுமிருத்தல் வேண்டும். பாவமானது எம்மை மட்டுமல்ல, சமூகத்தையும் பாதிக்கின்றது என்னும் உண்மை எமது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருத்தல் அவசியம்.

தபசுகாலம் ஞானவாழ்வின் வளர்ச்சியின் காலம். கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள நம்பிக்கை விசுவாசத்தை வளர்க்கும் காலம். முதல் மூன்று வாரங்களிலும் திருச்சபை இக்கருத்தைப் புனித சின்னப்பரின் நிருபங்கள்மூலம் வலியுறுத்தி விளக்குகின்றது.

ஆகவே, தேவனின் வார்த்தைக்குச் செவிசாய்த்து அதன்படி அநுசரிப்பது எமது கடமை. நாம் ஞானஸ்நானத்தின்மூலம் கிறிஸ்துவின் பாடுகளிலும் மரணத்திலும் உத்தானத்திலும் பங்கு பெறுகிறோமாகையால் எமது நற்கிருத்தியங்கள் செபதபங்களைக் கிறிஸ்துவின் உன்னத பலியோடு ஒன்றித்து வருவோமாக. விசுவாசம் இரட்சணியத்திற்கு வழி வகுக்கின்றது. ஞானஸ்நானத்தில் நாம் பெற்ற விசுவாச ஒளி இன்னும் அதிகமாக மிளிரவேண்டும்.

பாவமானது தேவனுக்குத் துரோகம் புரிவதாகும். ஆகையால், பாவத்தையும் பாவ நாட்டத்தையும் முற்றாக வெறுத்து, இறைவன் பாதம் அடைந்து அன்புகொள்ளுவதையே நாம் மனந்திரும்புதல் என்கிறோம். பாவசங்கீர்த்தனத்தை இரண்டாவது ஞானஸ்நானமென அழைக்கிறோம். ஏனெனில், அது ஞானஸ்நானத்தில் பெற்ற அருள் வாழ்விலிருந்து தவறி, பாவக்குழியிலிருக்கும் எம்மை மீண்டும் கைதூக்கும் ஒரு மருந்தாகும். சர்வேசுரனுடைய இராச்சியம் சமீபித்திருக்கின்றது. ஆகவே, மனந்திரும்புங்கள் என யேசுநாதர் கூவியழைக்கிறார்.

பாவத்தால் ஆன்மாவுக்கும் சரீரத்துக்குமிடையே பெரும் பிளவு ஏற்படுகிறது. மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே பகை; கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே தீராத பிரிவு. இதைத் தவிர்க்கவே கிறிஸ்து மனிதனுகப் பிறந்தார். எம்மெல்லோரையும் பொதுவிலே தமது பாடுகளினாலும் உத்தானத்தினாலும் அன்று இரட்சணித்தார். இவ்விரட்சணியத்தை எம்முடையதாக்குவது எமது சொந்த அலுவல். இப்பயங்கர பிரிவைத்தகர்த்தெறியத் தவவழி எமக்கு ஓர் உன்னத வழியாகத் திகழ்கிறது.

தபத்தால் நாம் எமது வாழ்வைச் செம்மைப்படுத்திக் கடவுளுக்கு உகந்தவர்களாக முடிகிறது. எமது அயலாருக்குச் சேவைசெய்யும் மனப்பாங்கை அளிக்கிறது. எமது சுயநலத்தை அழித்துப் பாவநாட்டங்களை ஒழிக்கிறது.

2-ம் வத்திக்கான்:

# தவம்



இறைபணியை அணுக மக்களால் இயலுமுன்
விசுவாசத்திற்கும் மனமாற்றத்திற்கும்
அவர்கள் அழைக்கப்பெறவேண்டும் ...
ஆகவே, உண்மையான ஒரே இறைவனையும்
அவர் அனுப்பிய யேசுக்கிறிஸ்துவையும் எல்லா மக்களும் அறியவும்,
தவஞ்செய்து தங்கள் நெறிகளினின்று
அவர்கள் மனந்திரும்பவும்,
திருச்சபை விசுவாசிகள் அல்லாதாருக்கும்
மீட்பின் நற்செய்தியைப் பறைசாற்றுகின்றது.
ஆனால், விசுவாசிகளுக்கு
அது எந்நாளும்
விசுவாசத்தையும் தவத்தையும்
போதிக்க வேண்டும்.
திருச்சபை தனது பாரம்பரியத்தின் வழியாகப்
பிறந்த ஒழுங்குகளின்படி,
ஆன்ம சார் பக்திமுயற்சிகள், அறிவுரை,
செபம், தவச்செயல்கள்,
இரக்கச்செயல்கள் ஆகியவற்றின் வழியாக
விசுவாசிகளுக்கு அளிக்கும் பயிற்சியை
நிறைவு செய்கின்றது.

(இறை பணி)

விசுவாசிகள் மனவருத்தத்துடன்
பச்சாத்தாபத்தின் வழியாக
திருச்சபையிடம் தங்கள் பாவங்களை வெளிப்படுத்த
மேய்ப்பராகிய கிறிஸ்துவின் உளப்படி
அவர்களைப் பயிற்றுவிக்கிறார்கள்.
இவ்வாறு "மனந்திரும்புங்கள், ஏனெனில்
விண்ணரசு நெருங்கிவிட்டது" (மத். 4 : 17) என்ற
ஆண்டவரின் வார்த்தைகளை மனதிற்கொண்டு
நாளுக்குநாள் மேன்மேலும் அவர்பால்
மனத்தைத் திருப்புவார்கள்.

(குருக்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புத் தம்பி - தங்கையருக்கு வணக்கம்!

மணிமுடி தரித்து, மகிதலத்தை ஆண்ட மன்னர்மரபில் உதித்தவரும், மாதருக்குள் மங்காப் பிரபையுடன் விளங்கும் மாசற்ற கன்னிகையின் மணவாளனும், மாசுபடிந்த உலகிலே மறுமலர்ச்சியை உருவாக்கிய அமலன் யேசுவின் கைத்தாதையுமாகிய அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்தை நாடி அடைவதற்கென அர்ப்பணிக்கப்பட்டது பங்குனிமாதம்.

வாழ்க்கைஎன்ற போராட்டத்தில் வாட்டமடைந்தோர், வறுமைப் பிணியால் வருந்துவோர், வாழ்க்கை நலம் நாடுவோர், கல்வி மேன்மை தேடுவோர், இன்னோரன்னவர்கள் சூசைமாதவத்தவன் பீடத்தை அணுகிப் பரிதாபக் குரல் எழுப்பி, கண்ணீர் பெருக்கி அவரின் சலுகையை நாடுவார்கள்.

இம்மாதத்தில் அர்ச். சூசையப்பருடைய சலுகையை நாடுவது மட்டும் போதாது. அவர் அனுசரித்த தளராத விசுவாசம், நம்பிக்கை, தாழ்ச்சி, அமைச்சல், கடமைகளில் பிரமாணிக்கம், கற்பு ஆதியாம் புண்ணியங்களை நாமும் நாளாந்த வாழ்க்கையில் அனுசரிக்கப் பிரயாசப்பட வேண்டும்,

— அண்ணு

# இழுவை வண்டிக்காரன்

பங்குனி மாதத்தின் நடுப்பகல் வெய்யில் கடுமையாகக் காய்ந்துகொண்டிருந்தது. தெருவீதியில் போட்டிருக்கும் தார்உருகியிருந்தது. இல்லத்தை விட்டு வெளியே புறப்பட்டால் மண்டை வெடித்துக் கால் பொசுங்கிவிடும்போல இருந்தது. தெருவீதியில் மனித நடமாட்டமே இல்லை. தெருவீதி பூரண நிலவு எறிக்கும் இரவைப்போல் அமைதியாக இருந்தது.

பலர் வெய்யிலுக்குப் பயந்துகொண்டு வீட்டில் உட்கார்ந்திருந்தார்கள். எத்தனை நாட்களாக ஒரேயடியாக உட்கார்ந்திருக்கலாம். அப்படி உட்கார்ந்திருக்க முடியாதவர்களில் இழுவை வண்டிக்கார வைரவனும் ஒருவன். அவனை நம்பி அவனைவிட இன்னும் இருவர் இருக்கிறார்கள். அவன் தன் வயிற்றைப் பட்டினி போட்டு விட்டாலும் மற்ற இருவர் வயிற்றையும் என் செய்வது. இன்னும் கொஞ்சம் கட்டாயப்படுத்தினல் மனைவி நல்லமாளையும் பட்டினி போட்டு விடலாம், ஆனல் பாவம் என் செய்வான்? தன் ஒரே ஒரு பிள்ளையான பொன்னனை என்ன செய்வதென்று அவனுக்கு விளங்கவில்லை.

இழுவை வண்டி முதலாளி இரத்தினம் பிள்ளைச் செட்டியாருக்கு நான்கு வண்டிகள் உண்டு. அவை நான்கையும் வாடகைக்குவிட்டு அந்தப் பணத்தையே எடுத்து அவர் சீவனம் செய்து வந்தார். இழுவை வண்டி இழுப்பவர்களுக்கு வரும்படி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும்சரி அவருக்குக் கவலையில்லை. அவருக்குக் கிடைக்கவேண்டிய தினசரி வாடகை இரண்டு ரூபாவும் ஒருசதமும் குறையாது தவருது வந்து சேர்ந்து விடவேண்டும். ஒரு சதம் குறைந்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

செட்டியாரின் இந்தத் தீர்மானம் வைரவனுக்கு நன்ருய்த் தெரியும். அதனல் பொழுது விடிந்ததும் அவன் வயிற்றுக்கு ஒன்றுமின்றி வண்டியை இழுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான். தெருத்தெருவாக வீதி வீதியாக மெதுவாக நடந்து சென்ருன். நேரம் சென்றுகொண்டேயிருந்தது. அன்று சோதனையாக அவனுக்கு ஒரு சதமும் கிடைக்கவில்லை. கடைசியில் நன்ருய்க் களைத்துப்போய்த் தெருவீதியின் அருகேயுள்ள ஒரு மர நிழலில் வண்டியை நிறுத்திவிட்டுச் சாய்ந்தான். அவன் நெற்றியிலிருந்து வியர்வை பெருகிக் கொண்டிருந்தது. உடலை மூடியிருந்த பாதிகிழிந்த சட்டையும் அரையில் கட்டியிருந்த துண்டும் வியர்வையில் நனைந்திருந்தன. அவன் கண்களை மூடித் தூங்கினன்.

சிறிது நேரத்தில் அயர்ந்து எழும்பினன். தூரத்திலுள்ள பஸ் வண்டி நிலையத்தில் ஒருவர் நிற்பதைக் கண்டான். வைரவன் இழுவை வண்டியுடன் அவர் அருகிற் சென்று ஐயா எங்கே போகவேண்டும், வண்டியில் ஏறுங்கள், என்ருன். நான் ஏறவில்லை பஸ் வண்டியில் போகிறேன், என்ருர் அவர். நீங்கள் விரும்பியதைத் தாருங்கள். இப்போது ஏறி உட்காருங்கள் ஐயா என்ருன் வைரவன்,

வேண்டாம் அப்பா வேண்டாம். நான் ஏறவில்லை என்ருர். அவர் ஒன்றுக்கும் அசையவில்லை. வைரவனைப் பார்க்கப் பார்க்க அவருக்குக் கருணையுண்டாயிற்று. வைரவன் நம்பிக்கை இழந்தவன்போல் காணப்பட்டான். இந்தக் கடூரமான வெய்யிலில் அவனைச் சுமையுடன் இழுக்கச்செய்தால் எவ்வளவு பாவம் கிடைக்குமென்று அவர் எண்ணினர்.

வைரவன் அவரின் தயக்கத்தை வேறுவிதமாக எண்ணினன். பஸ் வண்டியில் ஏறினல் காசு குறையக் கொடுக்கலாமென்று அவர் நினைத்தார். அவன் பின்பும் கெஞ்சினன். அவனுடைய வேண்டுகோள் அவரை உருக்கியது. சற்று நேரம் யோசித்துவிட்டு ஐயா நீங்கள் எல்லோரும் இப்படிச் சொன்னல் ஏழைகள் என்ன செய்வதென்று கேட்டான். அவர் சிறிது நேரம் யோசித்துவிட்டு என்னல் ஏற முடியாது. இந்தப் பன்னிரண்டணவையும் பிடித்துக்கொள் என்று கூறிக் கொடுத்துவிட்டு நடந்தார் அப்பெருமான். அவன் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மனம் யோசித்துக்கொண்டு இருக்கும்போதே கைகள் தாமாக நீண்டு அதை வாங்கின.

வைரவன் கையிலிருக்கும் பன்னிரண்டணவைப் பார்த்தான். அது இவனையே வெறித்ததுபோலிருந்தது. அவன் மனம் நீ வாங்கியது பிச்சைக்காசா அல்லது வெகுமதியா. ஆண்டவர் உனக்கு என்ன குறை வைத்திருக்கிருர். நொண்டியா? மூடமா? குருடா? உழைத்துச் சம்பாதிக்க முடியுமானல் உயிரை வைத்திரு அல்லது உயிரை விடு என்று அது நிந்திப்பதுபோல் இருந்தது.

அவன் உடல் அவமானத்தால் குன்றியது. உள்ளம் வெதும்பினன். "சாமீ......சாமீ......" என்று கத்திக்கொண்டு அவர் பின் ஓடினன். அவர் திரும்பிப்பார்த்தார்.

சாமீ நீங்கள் தர்மவான். ஏழைமேல் கருணையிருப்பதற்காகக் கும்பிடுகிறேன். ஆனல் இந்தக் காசை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் சாமீ என்ருன். கண்களில் நீர் பெருகச் சொல்லிக்கொண்டு அதைக் கொடுத்தான். அவர் பிரமை பிடித்தவர்போல் ஒன்றும் தோன்ருதவராய்ப் பதில் பேசாமல் அதை வாங்கிக்கொண்டு சென்ருர்.

# பத்துக் கட்டளைகள்

## நான்காம் கற்பனை

### பெற்ருேரின் கடமைகள்

**தாய்க்கழுதையின் பாசம்:**

சிலமாதங்களுக்குமுன் மதுரையின் ஒரு முக்கியவீதியில், குட்டிக் கழுதை ஒன்று காரில் அடிபட்டுச் செத்துக் கிடந்ததாகவும், உயிரற்ற குட்டிக் கழுதையின் சடலத்தின் பக்கத்தில் தாய்க் கழுதை நின்றுகொண்டு தன் வருத்தத்தை வெளிப்படுத்தும் முறையில் புரிந்த செயல்கள் அனைத்தும் அனைவருடைய மனத்தையும் நெகிழச் செய்யுமாறு அமைந்ததாகவும், அப்பகுத்தறிவில்லாப் பிராணியின் ஆர்ப்பாட்டச்செயலின் விளைவால், அவ்வீதியில் சிலமணி நேரம்வரை போக்குவரத்துத் தடைப்பட்டதாகவும் நாம்ஒரு தினசரி பத்திரிகை வாயிலாக அறிந்தோம். மேலே கூறிய இந்நிகழ்ச்சி மானிடர்களாகிய நம்மவர்களுக்கு ஒருசிறந்த எடுத்துக்காட்டாகவே அமைந்துள்ளது.

விலங்குகளிலே மிகக் கடைநிலையில் மனிதனல் கருதப்படும் கழுதைக்கு, தன் குட்டியின்மேல் இவ்வளவு அன்பு இயல்பாக அமைந்திருக்கும் பொழுது, பகுத்தறிவுபடைத்த மனிதனைப்பற்றி நாம் இதுவிஷயத்தில் அதிகம்கூறத் தேவையில்லை. 'பெற்ருேருக்குப் பிள்ளைகள் அன்புசெய்யவேண்டும்' என்றசட்டத்தை ஏற்படுத்திய இறைவன், 'பிள்ளைகளுக்குப் பெற்ருேர் அன்புசெய்ய வேண்டும்' என்றசட்டத்தை ஏற்படுத்தாததின் காரணம், ஒவ்வொரு பெற்ருேருக்கும் இயல்பாக அமைந்துள்ள இப்பாசஉணர்ச்சியின் அடிப்படையினல்தான் என்பதை நாம் மனதிற்கொள்ளவேண்டும். இறைவனின் நான்காம்கற்பனை பெற்ருேர்மேல் பிள்ளைகளுக்குரிய கடமைகளைப்பற்றி மட்டும் கூறியிருந்தாலும், பிள்ளைகளின்மேல் பெற்ருேருக்குரிய கடமைகளும் இக்கற்பனையில் உட்படுகின்றன என்பதை நாம் ஒருபோதும் மறத்தலாகாது.

### குழந்தைப் பருவத்தில்

**'மனிதன் ஒன்றைப் பார்த்து ஒன்றைச்செய்யும் விலங்கு'**

"தகப்பன்மார்களே, அவர்களை (உங்கள் பிள்ளைகளை) ஆண்டவருக்கேற்ற ஒழுக்கத்திலும் கண்டிப்பிலும் வளர்ப்பீர்களாக" (எபேசி. 6: 4) என்றபுனித சின்னப்பரின் அறிவுரைக்கேற்ப, பெற்ருேர் பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. ஆனல், அவர்களை இறைவனுக்கு உகந்த பிள்ளைகளாகவும் வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள். பிள்ளைகளின் உடல்நலத்தை மட்டும் பெற்ருேர் குறிக்கோளாகக் கொள்ளாது ஆன்மநலத்தையும் சிறுவயதிலிருந்தே பேணக் கடமைப்பட்டிருக்கிருர்கள். பிள்ளைகளைப் பெறுவது எளிது; ஆனல் அக்குழந்தைகளைத் தக்கமுறையில் வளர்ப்பதுதான் கடினம்.

மக்கட்செல்வம் இல்லறத்தின் இணையற்ற அணிகலம், வீட்டின் செல்வம், நாட்டின் நல்லுயிர், ஆகவேதான் வள்ளுவரும்:

"மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்று குழந்தைச் செல்வத்தை அழகுறப் பாடியுள்ளார் போலும்!

பெற்ருேருக்குத் தீப்பழக்கங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றைக் குழந்தைகளுக்கு முன்னே செய்தல் கூடாது. "மனிதன் ஒன்றைப்பார்த்து ஒன்றைச் செய்யும் விலங்கு" என்ற மனோதத்துவ அறிஞர்களின் கூற்றுப்படி, ஒருவர் செய்வதைப் பார்த்துச் செய்வது குழந்தையின் இயல்பு. தவருன செயல்களைக் குழந்தையின் எதிரில் செய்தால், அக்குழந்தைகளும் அவ்விதமே செய்யும். இதனல் குழந்தைகளைக் குறைகூறி என்னபயன்?

குழந்தைகள் பிறக்கும்பொழுதே அறிவிலும், பண்பிலும், பழக்கவழக்கத்திலும் மாறுபாடு உள்ளவர்களாகத்தான் பிறக்கிருர்கள். ஆனல், இவ்வியல்புகள் மாறுவதும் வளருவதும் சூழ்நிலையைப் பொறுத்துள்ளன. ஒரு குழந்தையைச் சுற்றியுள்ள சூழ்நிலை மேலானதாக இருந்தால், அக்குழந்தையும் உயர்ந்து விளங்கும். நம்நாட்டின் சூழ்நிலைதான் மிகவும் மட்டமாக இருக்கிறது. தாழ்ந்த எண்ணங்களும், இழிவான சொற்களும் குழந்தைகளிடம் இளமையிலே விரைவில் படிந்துவிடுகின்றன. சில நல்ல பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகளை இத்தகைய இழிவான பழக்கவழக்கங்கள் பிடிக்காவண்ணம் பல அரிய முறைகளைக் கையாளத்தான் செய்கின்றனர். என்ருலும், அவர்களின் முயற்சி ஓரளவுதான் வெற்றி பெறுகிறது.

பெற்ருேர் பிள்ளைகளைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கண்டித்து வளர்க்க வேண்டும். என்ருலும், அதற்கும் ஒரு வரம்பு வைத்துக்கொள்ள வேண்டும். கண்டிப்புடன் வளர்க்கிறேன் என்பதற்காக எதற்கெடுத்தாலும் குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துவது பெற்ருேருக்கு அழகல்ல. ஏனெனில் இத்தகைய செயலினல் குழந்தைகளின் பிஞ்சுமனம் கெடுவதோடு, அவர்கள் வளர்ந்தபிறகும் மனநோய்க்கு ஆளாகிருர்கள். அமெரிக்காவிலும், பிரான்சிலும் பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்தும் பெற்ருேர்களைச் சிறைக்கனுப்பக்கூடச் சட்டம் இருக்கிறது.

'பிடிவாதம் செய்யும் பிள்ளைகளைத் தண்டிக்காமல் வளர்த்தால், அவர்கள் வழிக்கு வருவார்களா?' என்று ஒருவேளை பெற்ருேர் கேட்கலாம். தண்டனை அளிப்பதினல்மட்டும் குழந்தைகள் பெற்ருேரின் சொற்படி கேட்கிருர்களா? இல்லையே! ஒரு குழந்தை தன் பெற்ருேரிடம் அன்பாகவும், மரியாதையாகவும் நடந்துகொள்வதற்குக் காரணம், பெற்ருேர் தன்னை அடிப்பார்கள் என்ற பயத்தினல் அன்று; அன்புமொழியும் பெற்ருேரிடம் அன்புடன் பழக அவனது பிஞ்சு உள்ளத்திலே இயல்பாகஎழும் ஆர்வத்தினலேயாகும் எனும் இவ்வுண்மையை ஒவ்வொரு பெற்ருேரும் உணரவேண்டும்.

குழதைகளிடம் வஞ்சம்தீர்க்கும் உணர்ச்சி அதிகரித்துவிட்டால், அது பெருத்த கேட்டை விளைவிக்கும். பெற்ருேர் சினத்துடன் எப்பொழுதாகிலும் பிள்ளைகளை அடித்துத் தண்டித்துவிட்டால், பிள்ளைகள் அதனை எளிதில் மறக்காது நினைவில் வைத்துக் கொள்கிருர்கள். சிலமணிநேரம் சென்றபிறகு சமயம் வாய்க்கும்பொழுது எதிர்பாரா நேரத்தில் குழந்தைகள் பெற்ருேரை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் வாக்குத்தத்தம்

ஊர்காவற்றுறை ம. ப. நீக்கிலாஸ் ராசநாயகம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், கிறீஸ்துவும் மரியாயின தும், தருமசபையைச் சேர்ந்தவரு மாகிய சங்கைக்குரிய சகோதரி மேரி நோமி அவர்களின் முதல் வாக்குத் தத்தம் நிகழும் 1968-ம் வருடம் பங்குனி மாதம் 21-ந்திகதி காவி, திருஇருதய மடத்தில் நடைபெறும். சகோதரி நோமி அவர்கள் கொட்டாஞ்சேனை நல்ஆயன் மடத்தில் கல்வி பயின்றவர். இவ்வேளையில் நண்பர்கள் உறவினர் முதலியோரின் செபமுயற்சிகள் நன்றியுடன் வேண்டப்படுகின்றது.

30, B 3, புளூமெண்டோல் மாடிகட்டிடம்
42/68. கொழும்பு, 13.

## என் ஆயனுயிரும்

யேசு நேச ஆயர் செவிதாரும்
என் ஆயுள் பூரா அண்மையிலிரும்
புண்ணிய பாதை நாடிடச் செய்வீர்
ஆண்டவா! என் ஆயனுயிரும்.

●

இருளைக் கண்டு மிரள விடாதீர்
இருளில் என் ஒளி நீர் தாமே
விழியல்லவிசுவாசம் என்விளக்காமே
ஆண்டவா! என் ஆயனுயிரும்.

●

நம்பிக்கை, எழும் ஐயம் அகற்றிடுமே
தோல்வியில் தேற்றம்நான் அடைந்திடவே
நின் உதவியை நாட அருள் புரிவீர்
ஆண்டவா! என் ஆயனுயிரும்.

●

பட்டியினின்றும் விலகநேரிடின்
தேடிப்பிடித்திடத் தேவா வேண்டினேன்
தாமதமின்றித் திரும்பிடச் செய்வீர்
ஆண்டவா! என் ஆயனுயிரும்.

●

மரணம் நெருங்கிடும் வேளை
சரணம் உம்மை நான் அடைந்தே
நித்தியம் நின் சந்நிதானம்
சத்தியம் வாழ வைப்பீர்
ஆண்டவா! என் ஆயனுயிரும்.

V. P. M.

## அரசாங்க - மத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷணையின்போது "மக்களின் நல்வாழ்வுக்கு அரசாங்க-மத ஒத்துழைப்பு இன்றியமையாதது" எனப் பேசிக்கொண்டார். உலக சமாதான தினக் கொண்டாட்டத்திற்குக் கீசிங்கர் அவர்கள் அளித்த ஆதரவுக்குப் பாப்பரசர் தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். சமயமும் அரசாங்கமும தத்தம்வேலைகளைச் செவ்வனே செய்துமுடிக்க ஒன்று மற்றதற்கு ஆதரவுஅளிப்பது அவசியமென்பதைப் பரிசுத்ததந்தை வற்புறுத்தினர்.

● பப்புவாதீவில 17,000 அடி உயரமான மலைகளில் ஒன்பதுசிறியகிராமங்களிலே சுமார்1,350 ஆதிக்குடிகள் தனிமையாகவசித்திருப்பது சமீபத்திலே கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள் குளிப்பதும், தங்களைக் கழுவிக்கொள்வதுமில்லையாம். காரணம், சருமத்தைக் கழுவித்துப்புரவுசெய்வதைத் தங்களுடையதேவர்கள் விரும்புவதில்லையென்று அவர்கள்கொண்டுள்ள ஒருகுருட்டு நம்பிக்கைதானும்.

● நியூயோக்நகரிலே பற்றேர்சன் எனுமிடத்தில் புனிதசூசையப்பர் கலாசாலையை நடத்திவருகின்ற பிறர்சிநேக சபைக் கன்னியாஸ்திரிமார் நியூயோக் மாகாண லொத்தரிலே முதல்பரிசாக 40,000பவுண் பெற்றிருக்கிறார்கள். இந்தஅதிர்ஷ்டத் திக்கெற் அவர்களின் மாணவிகளான மூவரின் தகப்பனால் அவர்களுக்கு வாங்கிக்கொடுக்கப்பட்டது.

● உலகிலேயே மிகப்பெரியதெனக் கருதப்படும் பாரியவிமானமொன்றை அமெரிக்கா தயாரித்திருக்கிறது. இதன் பெயர் "சி-5-கலக்ஸி" ஆகும். இது ஓர் உதைபந்தாட்ட மைதானத்தின் நீளமும், ஆறுமாடிக்கட்டட உயரமுமானது. இராணுவவீரர்களை ஏற்றிச்செல்வதற்கே இது பயன்படுத்தப்படும். உலகின் எந்தப்பகுதிக்கும் போர்வீரர்களை ஒருநாளிலேயே கொண்டுபோய் விடக்கூடிய சக்தி வாய்ந்த ஒருவிமானம் இதுவாகும்.

● உலகிலேயே மிகப்பெரிய அமெரிக்க இராணுவவிமானம் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆகாயத்தில் பறந்தது. 3,23,000றாத்தல் நிறைகொண்ட இவ்விமானத்தில் 700போர்வீரர் பிரயாணஞ்செய்யலாம். தாங்கிகள், குண்டுகள், அம்புலன்ஸ்களை ஏற்றிச் செல்லலாம். இதனைக்கட்டிமுடிக்க 83 லட்சம்பவுண் செலவாயிற்று.

● 800ஐரிஷ் பாடசாலைப் பிள்ளைகள் வரப்போகும் பரிசுத்தவாரத்தை லூர்துபதியில் செலவிடவிருக்கின்றார்கள். இவர்கள் அயர்லாந்திலே டப்ளின், ஆர்மா, துவாம்எனும் மேற்றிராசனங்களிலுள்ள கிறிஸ்தியன்பிறதர்மாரின் பாடசாலைகளிலிருந்து தெரியப்பெற்று ஆறுவிமானங்களில யாத்திரைநடத்துவார்கள்.

● இப்பொழுது அதிகமான ஐரோப்பிய, அமெரிக்கபெண்கள் புலிகள், வரிக்குதிரைகள், கரடிகளாகிய மிருகங்களின் தோலினாலான கம்பளித்துணிகளை அணிந்துவருவதன் காரணமாக அவைகள் பெருந்தொகையாக வேட்டையாடப்படுவதால் சில காலத்துள் இம்மிருகங்களை உலகில் காண முடியாமல் போய்விடுமென்று உலக வனபரிபாலனசங்கம் தெரிவித்திருக்கிறது.

● ஆஸ்திறேலிய சிட்னிநகரில் ரேய் டோறிக்என்பவர் நவீனமின்சாரக் கார்ஒன்றைக் கண்டுபிடித்துச் செய்திருக்கின்றார். இது பழுதுபார்க்கும் செலவையும், பராமரிப்புச்செலவையும் அதிககுறைவாகக் கொண்டதாய், நூறு ஆண்டுகாலம் ஓடக்கூடியதாம். "இந்தநூற்றாண்டில் மட்டுமல்ல, அடுத்தநூற்றாண்டிலும் இது ஓடிக்கொண்டிருக்கும்" என்று அவர் கூறுகின்றார்.

● எத்தியோப்பியநாட்டிலே அடிஸ்அபாபா தலைநகரில பழமையைவிரும்பிய பெண்கள் தற்போது பெண்கள் அணியும் நவீனநாகரீக கட்டைப் பாவாடையை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கி நெட்டைப் பாவாடை அணிந்து நடமாடத்தொடங்கியிருக்கிறார்களாம். நெட்டைப் பாவாடை முழங்காலுக்குக்கீழ் 35 சென்ரிமீற்றர் இறங்கியிருக்க குட்டைப் பாவாடை முழங்காலுக்குமேல் 35 சென்ரிமீற்றரில் நிற்கின்றதாம்.

● ருஷியாவிலே பாக்கலசா என்ற ஓர் அழும்குன்று இருக்கிறது. அதன் அழுகை மழைபெய்வதற்கு ஒருமுன்னறிகுறியாகும். அது அழத்தொடங்கிலை மழைபெய்யப் போகிறதென்று அறிந்துகொள்ளலாம். காற்றில் ஈரத்தன்மை அதிகரிக்கும்போது பாறைகளாலான அக்குன்று ஈரத்தை உறிஞ்சி வெளிவிட ஆரம்பிக்கவே "குன்று கண்ணீர்விடத் தொடங்கிவிட்டது" என்று மக்கள் கூறுவார்களாம்.

● அமெரிக்க பொதுச்சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் பல்வேறுவகையான குடிதண்ணீர் பிள்ளைகளின் பற்களுக்கு என்னசெய்கிறது என்பதைக் கண்டறிவதற்காகப் பாடசாலைப்பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருபல்லைப் பெற்றுவருகிறார்கள். "விஞ்ஞானத்துக்கென்று நான் ஒருபல்லைக்கொடுத்தேன்" என்ற விருதுமொழிப் பட்டியைப்பெற்று இதுவரை 20,000பிள்ளைகள் தங்களுடையபற்களை உதவியிருக்கிறார்கள்.

## ஒல்லாந்து கத்தோலிக்கர் விசுவாசத்தில் பிழை உடையவர்களா?

2-ம் வத்திக்கான் சங்க காலத்திலும் அதன்பின்பும் ஒல்லாந்துதேச கத்தோலிக்கர் திருச்சபையின் மந்தவேக மாற்றங்களில் வெளியரங்கமாக, மறுதேசத்தவரைப் பார்க்கிலும் கூடியமுறையில் தமது அதிருப்தியைத் தெரிவித்ததைக்கண்ட சிலர் ஒல்லாந்து கத்தோலிக்கர் விசுவாசத்தில் திடமில்லாதவரெனவும், சீக்கிரத்தில் திருச்சபையிலிருந்து வழுவிவிடுவார்களெனவும் கூறிவந்தனர். இது உண்மையா அல்லவா என அறிந்துவர ஆங்கிலதேச பிரபல்ய குருவாகிய அல்பன் அடிகளார் ஒல்லாந்துதேசம் சென்று திரும்பியிருக்கின்றார். அவர் சொல்லுவதாவது: "ஒல்லாந்து கத்தோலிக்கர் மறுதேச கத்தோலிக்கருக்கு எவ்வகையிலும் விசுவாசத்தில் குறைந்தவரல்லர். ஆனால் அவர்கள் முற்போக்கு உடையவர்கள். சொல்வதை ஒழிப்பு மறைப்பின்றிச் சொல்லும் குணமுடையவர். விவாதிக்கும் கருமங்களைக் காரசாரமாகவும் முழுமையாகவும் விவாதிப்பார்கள். ஆனால் விவாதத்துக்கு ஒருமுடிவு கண்டதும் அதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வார்கள். ஒல்லாந்து கத்தோலிக்கர் வேதவிசுவாசத்தை ஒருபோதும் கைவிடமாட்டார்கள்."

## கோட்டுவிற்பனவுவிளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்**

**வழக்கு இல. M. B. 8490**

வல்வெட்டித்துறை
வயித்திலிங்கம் இளையதம்பி குமாரசாமி
கைம்பெண் விசாலாட்சி

காலஞ்சென்ற வயித்திலிங்கம் இளையதம்பி குமாரசாமியின் காணிகளுக்கும், பொருட்களுக்கும் நியமிக்கப்பட்ட தத்துவகாரி — வழக்காளி

எதிராக
வெளிப்படுத்தப்பட்ட

1. மாதர் சின்னத்தம்பி
2. மாதர் சிதம்பரி இருவரும் அச்சுவேலி — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 8490-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்பட்டுள்ள இரண்டு துண்டுக்காணிகளை 1968-ம்ஆண்டு சித்திரைமாதம் 3-ந்தேதி புதன்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள்நின்று பிரசித்தஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,000மும், 29-9-66 தொடக்கம் 7-3-67 வரைக்கும் ரூபா 500-க்குப் 10சதவீதவட்டியும், கோட்டுச்செலவு 225ரூபா 32சதமும். இதில் 22-7-64-ல் கட்டிய ரூபாய் 400உம் கழித்து.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு, அச்சுவேலி கோவிற்பற்று அச்சுவேலி மேற்குஇறை "விலுப்பைக்காடு" நிலப்பரப்பு பத்து (10) லாச்சமும், ஒரு (1)குளியும். எல்லை கிழக்கு — வரதர் கார்த்திகேசுவின் ஆதனம். வடக்கு — சின்னன் பொன்னுவின் ஆதனம். மேற்கு — தண்ணீர் வாய்க்கால். தெற்கு — கீழ்குறிக்கப்பட்ட 2ஆம் துண்டுக்காணி.

2. ஷை விலுப்பைக்காடு நிலப்பரப்பு பத்தும் (10), ஒரு (1)குளியும். எல்லை: கிழக்கு — வரதர் கதிரேசுவின் ஆதனம். வடக்கு — முன் குறிக்கப்பட்ட ஆதனம். மேற்கு — தண்ணீர் வாய்க்கால். தெற்கு — செல்லமுத்து பெண் ஆசைப்பிள்ளையின் ஆதனம்.

ச. அ. மரியாம்பிள்ளை,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
4, சென்யேம்ஸ்,
கிழக்குவீதி, யாழ்ப்பாணம். 38-68

## ஆங்கில இலக்கியம் கற்பித்தல்

1968-ம் ஆண்டுக்கான G. C. E. O/L வகுப்புகளுக்குரிய ஆங்கில இலக்கிய பாடங்கள் கற்பிக்கப்படும்.

பெண்பிள்ளைகளுக்கு வார இறுதிநாட்களில் கற்பிக்கப்படும்

எஸ். றீடர்,
139, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

## பத்துக் கட்டளைகள்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிக்கவோ கடிக்கவோ செய்கிறார்கள். சிலமணி நேரத்துக்கு முன்பு தாங்கள் பிள்ளைகளின்மட்டில் நடந்துகொண்ட முறையின் விளைவால்தான், அவர்கள் தங்களைத் திரும்பத் தாக்குகிறார்கள் என்பதைப் பெற்றோர் அப்பொழுது உணருவதில்லை. பழிக்குப்பழி வாங்க வேண்டும்என்ற உணர்ச்சி குழந்தைகளிடம் மிகுதியாக ஏற்படுவது நல்லதல்ல. இவ்வுணர்ச்சி சிறுபருவத்திலேயே குழந்தைகளிடம் வேரூன்றி வளர்ந்துவிட்டால், பிற்காலத்தில அவர்கள் தீயநடத்தை யுடையவர்களாக மாறிவிடுவார்கள்என்று கூறுகிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்.

சிறுபருவத்தில் சாதுவாயுள்ள குழந்தைகளை அடித்துத் துன்புறுத்தியும, அவமானப்படுத்தியும் வளர்த்தால் பிற்காலத்தில் அவர்கள் தீயவர்களாக மாறிவிடுகின்றனர். கொலை, கொள்ளைபோன்ற காரியங்களைச் செய்யவும் துணிந்துவிடுகிறார்கள். தன்னைத் துன்புறுத்தியவர்களைப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணம் மனதுக்குள்ளே குமுறிக்கொண்டிருந்து, பிற்காலத்தில் அது திடீரென்று பீறிட்டுக்கொண்டு கிளம்பி வெளிப்பட்டுவிடுகிறது. தனக்குத் துன்பம் இழைத்தவர்கள் பெற்றோராயிருந்தாலும், அதற்குச் சமுதாயத்தின் மேலே பிற்காலத்தில் அவர்கள் பழிதீர்த்துக்கொள்ள எத்தனிக்கிறார்கள். எனவே, குழந்தைகளிடம் இவ்வுணர்ச்சி தென்பட்டால், பெற்றோர் அவர்களை மிகவும் அன்புடன் கண்காணித்து வளர்க்கவேண்டும்.

நம்மில் அநேக பெற்றோரிடம் தீய்பழக்கங்கள் மிகுந்துகாணப்படுகின்றன, உதாரணமாக, புகை பிடித்தல், பொடிபோடுதல் போன்ற தீயபழக்கங்களைப் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் முன்னால் கையாளுவதால் அதைக் கண்டு குழந்தைகளும் அவர்கள் செய்வதுபோலவே பாவனை செய்கின்றனர், குழந்தைகளின் இச்செயலைக் கண்டு பெற்றோர் அவர்களைக் கண்டிப்பதற்குப் பதில் பாராட்டுவதுண்டு. இன்னும் சில பெற்றோர்கள் தீயவார்த்தைகளைக்குழந்தைகளுக்குமுன்னே பேசுவதால், அக்குழந்தைகளின் பிஞ்சுஉள்ளங்களில் பசுமரத்தாணிபோல் அவ்வார்த்தைகள் பதிந்து, சொன்னதைச் சொல்லும கிளிப்பிள்ளையைப்போல, அத்தீய வார்த்தைகளைச் சொல்வதுண்டு. இதைக் கேட்டுப் பெற்றோரும் மகிழ்வார்கள். தங்களின் இத்தகைய தீப்பழக்கங்கள்தான் நாளை தங்கள் பிள்ளைகளையும் ஆட்கொள்ளும்என்ற இவ்வுண்மையை ஏனோ நம்மவர்கள் உணர்வதில்லை.

ஒருநாள் நம் ஆண்டவர் குழந்தை ஒன்றைத் தப்சீடர்கள் மத்தியிலநிறுத்தி, அவர்களை நோக்கி: "இச்சிறியோரில் ஒருவனுக்கு இடறலாயிருப்பவன் எவனோ, அவன் கழுத்திலே கழுதை சுழற்றும் எந்திரக்கல் கட்டுண்டு சமுத்திரத்திலே தள்ளப்பட்டால் அவனுக்கு அதிகநலமாயிருக்கும்!" (மாற்கு 9:41) என்று எச்சரித்துள்ளதாக நாம் சுவிசேஷத்தில் காண்கிறோம். நம் திவ்விய மீட்பரின் இக்கடின வார்த்தையிலிருந்து சிறுவர்களுக்குத் துர்மாதிரியாக இருப்பது எவ்வளவு கனமான குற்றமாகும் என்பது நமக்கு நன்கு புலனாகிறது அல்லவா?

— இராமை ஞ. மிக்கேல்ராஜ்
— சத்தியபோதினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

### பொலிஸ்காரருக்கு எச்சரிக்கை

இலங்கைப் போக்குவரத்துச்சபைப் பஸ்களின் மிதிபலகைகளில்நின்று பிரயாணிகளுக்கு அசௌகரியத்தை உண்டுபண்ண வேண்டாமென்று பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறல் பொலிஸ்காரருக்குப் கடுமையானஎச்சரிக்கைஒன்று விடுத்திருக்கின்றூர். இனிமேலும் இவ்வாறு நடைபெறுமானல் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றூர்.

### நீதிபதியின் இடமாற்றம்

யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிவந்த திரு. நைல்ஸ்அவர்கள் இம்மாதம் 15ஆம் திகதிமுதல் நீர்கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றூர்.

### ஒரு கொத்துஊரரிசி

அரசாங்கம் இலவசமாக வழங்கி வரும் பங்கீட்டரிசியுடன் ஒருகொத்து உள்நாட்டரிசியையும் குறைந்தவிலையாக— அதாவது ஒருகொத்துஅரிசி 50சதமாக மக்களுக்குவழங்க ஆலோசித்து வருகின்றது. தற்சமயம் ஒரு கொத்து உள்நாட்டரிசி கறுப்புச்சந்தையில் 1ரூபா50சதம், 1ரூபா60சதமாக விலைப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

### இராணுவமும் விவசாயமும்

உணவுப்பொருள் செய்கைத் திட்டத்தின்கீழ் இலங்கைமுழுவதிலும் ஏறக்குறைய இருபது விவசாயமுகாம்கள் அமைக்கப்பட விருக்கின்றன. இலங்கை இராணுவத்தினரே இந்தமுகாங்களை அமைத்து உணவுப்பொருள் செய்கையைத் தீவிரப்படுத்துவரெனத் தெரியவருகிறது. அவர்களது ஏற்பாட்டின்படி இந்தவிவசாயமுகாங்கள் பலாலி, திருகோணமலை, கந்தளாய், மன்னர்போன்ற இடங்களில் அமைக்கப்படவிருக்கின்றன.

### ஆறும்வகுப்புப் பரீட்சை

இலங்கையில் முதன்முறையாக இவ்வருடம் கீழ்வகுப்புகளிலும் அரசாங்க பரீட்சை நடத்தப்படவிருக்கிறது. ஆறும்வகுப்புக்கு அரசாங்கம் நடத்தவிருக்கும் தவணைப்பரீட்சை இந்தப் பங்குனிமாதம 25ஆம், 26ஆறுமதிகதிகளில் நடைபெறவிருக்கிறது. மாகாணரீதியாக இப்பரீட்சைக்கு வினுத்தாள்கள் தயாரிக்கப்படும. இனிமேல் ஆறும்வகுப்புக்குரிய ஒவ்வொரு தவணைப்பரீட்சையையும் அரசாங்கமே நடத்துமென்றும், இதற்குத்தோற்றும் மாணவர் மாணவிகள் ஆங்கிலம, தமிழ் அல்லது சிங்களம், பொதுவிஞ்ஞானம, பூமிசாஸ்திரம், தூயகணிதம, சரித்திரம், தையல் ஆகியனவும், வேறொரு பாடமும் எடுக்கவேண்டுமென்றும், ஆறும்வகுப்பிலுள்ள அத்தனை மாணவர், மாணவிகளும் பரீட்சைக்குக் கட்டாயம் தோற்றவேண்டுமென்றும், வினுத்தாள்கள் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரேவினுக்களைக் கொண்டிருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூடிய தொகைக்கட்டணம்

கப்பல்போக்குவரத்துக்குச் சுவெஸ் கால்வாய் மூடப்பட்டமையாலே இலங்கை சென்றஆண்டு மேலதிக கப்பல்கட்டணமாக ஐந்துகோடிரூபா செலுத்தியிருக்கிறது. சுவெஸ்கால்வாய் இவ்வாண்டுமுழுவதும் தொடர்ந்து மூடப்படுமானல் இந்தமேலதிக கப்பல்கட்டணம் பத்துக்கோடி ரூபாவாக அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதனல் இறக்குமதிப் பொருட்களின் அளவு குறைய, அத்தியாவசிய பொருட்களுக்கு அதிகளவு தட்டுப்பாடு ஏற்படும்.

### கட்டிப்பால் தொழிற்சாலை

பொலனறுவையில் அமைக்கப்பட்டுள்ள கட்டிப்பால் தொழிற்சாலை இம்மாத நடுப்பகுதியில் இயங்கவிருக்கிறது. இதிலே கட்டிப்பாற்செய்கை உச்சநிலை அடையும்போது அதில் வருடம்ஒன்றுக்கு 2கோடியே50லட்சம் தகரங்கள் கட்டிப்பால அடைத்துத் தயாரிக்கப் படுமென்றும், அதனல் வருடந்தோறும் 1கோடியே 8லட்சம்ரூபா வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்தலாமென்றும், இலங்கைக்குத் தேவைப்படும் கட்டிப்பாலை இங்கேயே தயாரிக்கலாமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

### பெற்றேல் ஆராய்ச்சி

வடபகுதியிலே கடந்த பலமாதங்களாகப் பெற்றேல் எண்ணெய் ஆராய்ச்சிநடத்திய பிரான்சியநிபுணர்கள் செம்பியன்பற்றையடுத்த மாமுனைப்பகுதியிலும், குடாரப்பிலும், புங்குடுதீவிலும் 12,000அடி ஆழத்தில் பெற்றேல்ஊறுவதாகக் கண்டுபிடித்துள்ளார்கள். மேலும் மன்னரையடுத்த கிராஞ்சியிலும், நெடுந்தீவிலும் பெற்றேல்ஊறலாமென அவர்கள் நம்புகிருர்கள. இந்தநாட்களிலே பண்ணையயடுத்த பகுதிகளில் ஆராய்ச்சி நடைபெறவிருக்கிறது. இன்னும்இருவாரங்களில் அவர்கள் பெற்றேல் ஆராய்ச்சிநடத்தப் புத்தளஞ்செல்ல விருக்கிருர்கள்.

### புதிய உபசபாநாயகர்

சனப்பிரதிநிதிகள் சபை சென்ற வெள்ளிக்கிழமை கூடியபோது புதிய உபசபாநாயகராக உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் அவர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பெற்ருர். இவருடைய பெயரைச் சபைமுதல்வர் திரு. சி. பி. டீசில்வா பிரேரேபித்தார். எதிர்க்கட்சிக் கொறடாவான திரு. மைக்கல் சிறீவர்த்தன அனுவதித்தார். வேறுபெயர்கள் பிரேரேபிக்கப்படாமையால் திரு. எம். சிவசிதம்பரம்அவர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பெற்றுள்ளாரெனச் சபாநாயகர்தெரிவித்து அவரைப்பாராட்டினர். திரு. சிவசிதம்பரம் சுகவீனம்காரணமாக அன்று சபையிலே சமுகமாயிருக்கவில்லை.

### காங்கேசன் சீமேந்து

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் முதற்கட்டம் பூர்த்தியானதுடன் சீமெந்துஉற்பத்தி 1966ஆம்ஆண்டிலே 81,570தொன்னிலிருந்து சென்ற1967 ஆம்ஆண்டிலே 1,52,235தொன்ளுக உயர்ந்துள்ளது. காலியிலே நவமாக ஆரம்பிக்கப்பட்ட ருஹுனுச் சீமெந்துத் தொழிற்சாலை சென்றவருடப் 36,506தொன்சீமெந்து உற்பத்திசெய்திருக்கிறது. இலங்கைக்குத் தேவைப்படும் சீமெந்துமுழுவதும் 1972ஆம் ஆண்டுவரையில்இங்கேயே உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்தியாவின் கடன் அரிசி

இலங்கைக்குப் 10,000தொன் பர்மாஅரிசியை இந்தியா கடனுகக் கொடுத்துதவ முன்வந்திருக்கிறது. இலங்கையின் அவசியஅரிசித்தேவையை முன்னிட்டுத்தான் இதனை அது வழங்குகின்றது. இந்தியாவிலும் கடுமையான அரிசிநெருக்கடி இருந்தபோதிலும் இலங்கையிற்கொண்டுள்ள நல்லெண்ணத்தின் பேரிலேயே பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வரவிருக்கும் இரண்டு அரிசிக்கப்பல்களை இலங்கைக்குத் திருப்பிவிடப்போகின்றது. இம்மாதம்மூன்றுவதுவாரத்தில் இலங்கைக்கு வரும் முதலாவதுகப்பலில் 6,200 தொன் அரிசியும், பின்னர் இரண்டாவது கப்பலில் 3,800தொன் அரிசியும் வந்துசேரும். பின்னர் இவ்வருடத்தின் பிற்பகுதியிலே இலங்கை இந்தஅரிசியை இந்தியாவுக்குத் திருப்பிக்கொடுக்கும்.

### கைத்தொழில்பேட்டை ஸ்தாபகம்

அச்சுவேலியிலே எழுபதுஏக்கர் விஸ்தீரணமான காணிஒன்றில் சுமார் 40லட்சம்ரூபாசெலவில் கைத்தொழில் பேட்டைஒன்றை அமைப்பதுசம்பந்தமான இறுதிவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் சுமார் 1,500 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமெனத் தெரியவருகிறது. யாழ்ப்பாணத்திலே புதியகைத்தொழில்களை ஆரம்பிக்க முன்வருகிறவர்களுக்கு வேண்டியஉதவிகளைச்செய்யக் கைத்தொழில்பேட்டைக் கார்ப்பறேஷன் முன்வருமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### உணவுச் சிக்கனசட்டம்

அரசாங்கத்தின் அவசரகால உணவுச் சிக்கனசட்டம சென்றஞாயிற்றுக்கிழமைமுதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இச்சட்டத்தின்படி திருமணவைபவம், மற்றும் விசேடவைபவங்களிலே காலை, மத்தியான, மாலை விருந்துகளில் 100பேருக்குமேற்பட்ட விருந்தினர்கள் உணவருந்தாது பார்த்துக்கொள்ளப்படும. இந்தவைபவங்களில் வீணுட்கள் கூடுவதையும், செலவையும்கடடுப்படுத்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும. ஆயினும இது விஷயமாய்ச் சில விதிவிலக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

### தீவுப்பகுதி வித்தியாதரிசி

தீவுப்பகுதி வட்டாரவித்தியாதரிசியாகக் கடமையாற்றிவந்த திரு. எம். ஜே. சீமாம்பிள்ளை அவர்கள் காங்கேசன்துறை வட்டாரவித்தியாதரிசியாக இடமாற்றம் செய்யப்பெற்றிருக்கிருரென அறிகின்ருேம்.

### 90விகிதம் சித்திபெறவில்லை

சென்றமார்கழிமாதம் நடைபெற்ற பொதுத்தராதரபத்திர சாதாரணபரீட்சையில் (ஜி. சி. ஈ) ஆங்கிலபாடம் எடுத்த மாணவர்களில் ஏறக்குறையத் 90சதவிகிதமானேர் சித்தியடையவில்லை.

### நமது தேசிய குருமாணவர் கல்லூரி ஒரு சர்வகலாசாலை ஆயிற்று

வேதப்பரப்புதல் தொண்டுக்கென வத்திக்கானில் நிறுவப்பட்ட உயர் சர்வகலாசாலையிலிருந்து அண்மையில் வெளிவந்த அறிக்கையின்படி இலங்கையில் கண்டியிலுள்ள நமது தேசிய குருமாணவர் கல்லூரிக்கு ஒரு சர்வகலாசாலை அந்தஸ்து இந்தப் பங்குனிமாசத்துடனிருந்து அளிக்கப்பட்டிருக்கின்றது. இன்று இக்கல்லூரியின் தலைவராக விளங்கும் வணக்கத்துக்குரிய வோர்ப்ஸ் சுவாமியார் இச்செய்தியைப் பெற்றதும், "இது எமது நாட்டுக்கும், இக் குருமாணவர் கல்லூரிக்கும் அளிக்கப்பட்ட பெரும் மகிமை" எனக்கூறினர். வேதசாஸ்திரம், தத்துவசாஸ்திரம் ஆகிய இருதுறைகளிலும் பட்டதாரிகளுக்கு உரிய பரீட்சைகள் யாவற்றையும் விரைவில் எமது நாட்டுச் சர்வகலாசாலை வழங்க இருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

---

❁ பிரித்தானிய ஆட்சியின்சரித்திரத்திலே அதன்நாணயங்களில் அரசகுடும்பத்தினரின் உருவங்களைத்தவிர ஏனையவர்களில் இரண்டே இரண்டு பிரமுகர்களின் உருவங்கள்மட்டும் இதுகாலவரை இடம்பெற்றுள்ளன எனபதும், ஒலிவர் குறொம்வெல், வின்ஸ்ரன் சேர்ச்சில்என்பவர்களே அவ்விரு பிரமுகர்கள் என்பதும் தெரியுமா ?

❁ தென்னமெரிக்காவிலே பசிபிக்-கறிபியன்எனும் இரண்டினதும் கடற்காட்சியைக்கொண்டதாய்-தரிசகர்களை அதிகமாக ஈர்த்துகொள்ளும் கண்ணுக்கினிய கவர்ச்சிகரமான பல்வேறு காட்சிகளைக்கொண்டதாய்- "ஸ்பானியாவின் மரகதமணி"யெனச் சிறப்புப்பெயர் பெற்றதாய்த் திகழ்வது கொலம்பியாஎன்ற ஒரேயொரு குடியரசுநாடு என்பதும், இந்தநாட்டின் பொகொட்டாநகரில்தான் அடுத்தகோடைகாலத்தில் 39ஆவது அகிலஉலக சற்பிரசாதமகாநாடு நிகழவிருக்கிறது என்பதும் தெரியுமா ?


மின்சாரத்தில் இயங்கும்

# சென்றிக்

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

மண்ணெண்ணெயினல் இயங்கும்

# சென்றிக்

யூனியர்—சீனியர்

பாரம் குறைந்த

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

எமது பலதரப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களுடன் அறிமுகப்படுத்துகிருேம்



# ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ்ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ஹு பங்குனிமீ 16-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org